05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# SIMILI DALAM PUISI TAMIL BHARATHIDASAN
# பாரதிதாசன் கவிதைகளில் உவமைகள்: ஒரு தொல்காப்பியப் பார்வை

KASTURI SUBRAMANIAM
கஸ்தூரி சுப்பிரமணியம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT
UNTUK MEMPEROLEHI IJAZAH SARJANA SASTERA
(KESUSASTERAAN TAMIL)
(MOD PENYELIDIKAN)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
மொழியியல் தொடர்பாடல் புலம்
சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

2017

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**SIMILI DALAM PUISI TAMIL BHARATHIDASAN**

## ABSTRAK

Kajian ini bertujuan untuk mengenal pasti dan menjelaskan keistimewaan simili dan mengenal pasti simili yang banyak digunakan dalam puisi Bharathidasan. Ianya juga dilaksanakan untuk menganalisa penggunaan teori simili oleh Bharathidasan dalam antologi *Alakin Cirippu* dan *Icai Amutu*. Kaedah kualitatif iaitu kajian kepustakaan dan analisis kandungan teks serta teori simili yang dipelopori oleh Tholkaapiyar digunakan. Kajian ini berdasarkan kepada empat jenis simili iaitu *vinai*, *payan*, *mei* dan *uru*. Dapatan kajian menunjukkan daripada 227 buah puisi yang dikaji, 18 buah puisi menggambarkan simili *vinai*, lapan buah puisi menggambarkan simili *payan*, 24 buah puisi menggambarkan simili *mei* dan 14 buah puisi menggambarkan simili *uru*. Kajian ini menunjukkan 62 daripada 64 buah puisi mengandungi simili yang sesuai dengan teori simili Tholkaapiyar. Dua buah puisi mengandungi simili yang tidak sesuai kerana ianya dihasilkan untuk menghayati keindahan dan keunikan puisi melalui pengaplikasian teori simili. Puisi Bharathidasan menunjukkan penggunaan empat jenis simili boleh dijadikan contoh atau panduan dalam penulisan puisi. Implikasi kajian boleh digunakan oleh pemuisi Tamil di Malaysia untuk menghasilkan puisi yang lebih menarik menggunakan simili oleh Bharathidasan.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**SIMILES IN BHARATHIDASAN POEMS**

## ABSTRACT

The objective of this research is to identify and explain the uniqueness of simile and to identify the similes which were mostly used by Bharathidasan's poem. It is also done to analyse the application of simile theory used by Bharathidasan in *Alakin Cirippu* and *Icai Amutu* anthologies. Qualitative analysis using library research and text content analysis based on Tholkaapiyar's simile theory were used. The analysis was based on four types of simile that is *vinai, payan, mei* and *uru.* Findings of the research show that out of the 227 poems used for this study, 18 poems show *vinai* simile, eight poems show *payan* simile, 24 poems show *mei* simile and 14 poems show *uru* simile. Sixty two out of 64 poems show that simile used were in accordance with the theory of Tholkaapiyar simile. Two poems were not in accordance with the theory as they were meant to appreciate beauty and the uniqueness of the poems through the application of simile theory. Bharathidasan poems show that the four types of simile can be used as examples or as a guide to writing poems. It is implied that this research can be used by Malaysian Tamil poets to write poems which are more attractive using similes by Bharathidasan.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**பாரதிதாசன் கவிதைகளில் உவமைகள்: ஒரு தொல்காப்பியப் பார்வை**

## ஆய்வுச்சுருக்கம்

‘பாரதிதாசன் கவிதைகளில் உவமைகள்: ஒரு தொல்காப்பியப் பார்வை’ என்ற தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் நோக்கமானது, பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் உவமை சிறப்பை அடையாளம் கண்டு விளக்குதல், பாரதிதாசன் கவிதைகளில் தொல்காப்பிய உவமை கோட்பாட்டுப் பொருத்தப்பாட்டினைப் பகுத்தாய்தல். பாரதிதாசன் கவிதைகளில் இடம்பெற்றுள்ள தொல்காப்பிய உவமையியல் கூறுகளில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள கூறுகளை அடையாளம் காணுதல். இந்த ஆய்வுக்காக ஆய்வின் எல்லை கருதி பாரதிதாசனின் அழகின் சிரிப்பு, இசையமுது ஆகிய இரு கவிதை நூல்கள் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொல்காப்பியரின் ‘உவமையியல்’ இந்த ஆய்வின் கோட்பாடாகக் கையாளப்பட்டுள்ளது. ஆய்வின் தரவுகள் முதன்மைச் சான்றாதாரங்கள் மற்றும் துணைமைச் சான்றாதாரங்கள் வழி சேகரிக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் விளக்கமுறையிலும் பகுப்புமுறையிலும் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. தரவுகள் தொல்காப்பிய ‘உவமையியல்’ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது. பாரதிதாசன் கவிதைகளில் கிடைக்கப்பெற்ற உவமைகள் ‘வினை’, ‘பயன்’, ‘மெய்’, ‘உரு’ என்று நான்கு வகையில் பகுக்கப்பட்டுள்ளது. பாரதிதாசன் கவிதைகளில் ‘வினை’ உவமையே அதிகமாகக் கிடைக்கப்பெற்றுள்ளது. ‘பயன்’ உவமை மிகவும் குறைந்த எண்ணிக்கையில் கிடைக்கப்பெற்றுள்ளன. ‘மெய்’ மற்றும் ‘உரு’ உவமைகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. அழகின் சிரிப்பு மற்று இசையமுது ஆகிய இரு கவிதைத் தொகுப்புகளையும் ஒப்பிடும் பொழுது அழகின் சிரிப்பிலே அதிகமான உவமைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆய்வின் முடிவாகப், பாரதிதாசன் கவிதைகள் புதிய நோக்கில் அமைந்திருந்தாலும் தொல்காப்பிய மரபு மீறாமலே அமைந்துள்ளன. தொல்காப்பிய உவமையியல் உவமையைப் பற்றிக் கூறுவது போல் ‘வினை’, ‘பயன்’, ‘மெய்’, ‘உரு’ ஆகிய நான்கு வகையிலும் பாரதிதாசனின் கவிதைகளில் உவமைகள் அமைந்துள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**பொருளடக்கம்**


| | | |
|---|---|---|
| | | **பக்கம்** |
| ஆய்வாளர், நெறியாளர் உறுதி மொழி | | ii |
| சமர்ப்பணம் | | iii |
| நன்றியுரை | | iv |
| Abstrak | | v |
| Abstract | | vi |
| ஆய்வுச்சுருக்கம் | | vii |
| பொருளடக்கம் | | viii |
| அட்டவணைப் பட்டியல் | | xii |
| வரைபடப் பட்டியல் | | xiii |
| குறிவரைவுப் பட்டியல் | | xiv |
| சுருக்கக் குறியீட்டு விளக்கம் | | xv |
| **இயல் 1 - அறிமுகம்** | | |
| 1.1 | முன்னுரை | 1 |
| 1.2 | ஆய்வுப் பின்னணி | 2 |
| 1.3 | ஆய்வுச் சிக்கல் | 5 |
| 1.4 | ஆய்வு நோக்கம் | 6 |
| 1.5 | ஆய்வு வினா / கருதுகோள் | 6 |
| 1.6 | ஆய்வு நன்மைகள் | 7 |
| 1.7 | ஆய்வு எல்லை | 8 |
| 1.8 | ஆய்வுச் சான்றாதாரங்கள் | |
| 1.8.1 | முதன்மைச் சான்றாதாரங்கள் | 8 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.8.2 துணைமைச் சான்றாதாரங்கள் 8

1.9 கலைச்சொல் விளக்கம்

1.9.1 பாரதிதாசன் 9

1.9.2 கவிதை 9

1.9.3 உவமையியல் 11

1.9.4 அழகியல் 12

1.10 தொகுப்புரை 14

**இயல் 2 - முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 15

2.2 பாரதிதாசன் பற்றிய முனைவர்பட்ட ஆய்வுகள் 15

2.3 பாரதிதாசன் பற்றிய முதுகலைப்பட்ட ஆய்வுகள் 24

2.4 தொல்காப்பியம் பற்றிய முனைவர்பட்ட ஆய்வுகள் 32

2.5 தொல்காப்பியம் பற்றிய முதுகலைப்பட்ட ஆய்வுகள் 33

2.6 ஆய்வுக் கட்டுரை 34

2.7 தொகுப்புரை 35

**இயல் 3 - ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 36

3.2 ஆய்வு வழிமுறைகள் 36

3.3 ஆய்வு வடிவமைப்பு 38

3.4 ஆய்வு அணுகுமுறை 39

3.4.1 விளக்கமுறை ஆய்வு 39

3.4.2 பகுப்புமுறை ஆய்வு 40

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



3.5 தரவு சேகரிப்பு முறை 41

3.6 தரவுப் பகுப்பாய்வு முறை 42

3.7 ஆய்வுக் கோட்பாடு 43

3.8 கோட்பாட்டுக் கட்டமைப்பு 47

3.9 தொகுப்புரை 48

**இயல் 4 - பகுப்பாய்வு மற்றும் கண்டுபிடிப்புகள்**

4.1 முன்னுரை 49

4.2 பாரதிதாசன் கவிதைகளில் 'வினை' உவமை 52

4.2.1 இயற்கை 52

4.2.2 விலங்குகள் 61

4.2.3 பறவைகள் 62

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.2.4 மனிதர்களின் செயல் 66

4.3 பாரதிதாசன் கவிதைகளில் 'பயன்' உவமை 72

4.3.1 மகிழ்ச்சி 72

4.3.2 தமிழ்ச்சுவை 74

4.3.3 இனிமை 77

4.4 பாரதிதாசன் கவிதைகளில் 'மெய்' உவமை 79

4.4.1 இயற்கை 79

4.4.2 விலங்குகள் 90

4.4.3 பறவைகள் 92

4.4.4 உடல் உறுப்புகள் 95

4.4.5 தளவாடப் பொருட்கள் 98


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.5 பாரதிதாசன் கவிதைகளில் 'உரு' உவமை 101

4.5.1 இயற்கை 101

4.5.2 பறவைகள் 106

4.5.3 பெண்களின் முகம் 111

4.6 அழகின் சிரிப்பு மற்றும் இசையமுதில் கிடைக்கப்பெற்ற கவிதைகளின் உவமை எண்ணிக்கை 114

4.7 அழகின் சிரிப்பு மற்றும் இசையமுதில் கிடைக்கப்பெற்ற கவிதைகளின் உவமை எண்ணிக்கையின் வேறுபாடு 116

4.8 முடிவுரை 120

**இயல் 5 - முடிவுரை**

5.1 முன்னுரை 122

5.2 ஆய்வு முடிவுகள் 122
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
5.3 தொடர் ஆய்விற்கான பரிந்துரைகள் 126

5.3.1 கவிதைத் தொகுப்பு நூல்கள் 126

5.3.2 பிற கவிஞர்களின் தொகுப்பு நூல்கள் 127

5.3.3 ஆய்வின் கோட்பாடு 127

5.3.4 அணிச் சிறப்புகள் 128

5.4 முடிவுரை 128

துணைநூற் பட்டியல் 132

பின்னிணைப்பு அ

பின்னிணைப்பு ஆ

பின்னிணைப்பு இ

Ringkasan Eksekutif

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## அட்டவணைப் பட்டியல்

**அட்டவணை** **பக்கம்**


3.1 உவமையியல் தலைமைச் சூத்திரத்திற்கான சான்று 45

3.2 கண்ணுக்குப் புலனாகா உவமைக்கான சான்றுகள் 46

4.1 அழகின் சிரிப்பு மற்றும் இசையமுதில் கிடைக்கப்பெற்ற கவிதைகளின் உவமை எண்ணிக்கை 114

4.2 அழகின் சிரிப்பு மற்றும் இசையமுதில் கிடைக்கப்பெற்ற கவிதைகளின் உவமை எண்ணிக்கையின் வேறுபாடு 116


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## வரைபடப் பட்டியல்


| வரைபடம் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வு வடிவமைப்பு | 38 |
| 3.2 | தரவு சேகரிப்பு முறை | 41 |
| 3.3 | தரவுப் பகுப்பாய்வு முறை | 42 |
| 3.4 | கோட்பாட்டுக் கட்டமைப்பு | 47 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**குறிவரைவுப் பட்டியல்**


| வரைபடம் | | பக்கம் |
|---|---|---|
| 4.1 | அழகின் சிரிப்பு மற்றும் இசையமுதில் கிடைக்கப்பெற்ற கவிதைகளின் உவமை எண்ணிக்கை | 115 |
| 4.2 | அழகின் சிரிப்பு மற்றும் இசையமுதில் கிடைக்கப்பெற்ற கவிதைகளின் உவமை எண்ணிக்கையின் வேறுபாடு | 117 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| சுருக்கக் குறியீடு | விளக்கம் |
|---|---|
| ப | பக்கம் |
| சூ | சூத்திரம் |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# இயல் 1

## அறிமுகம்

### 1.1 முன்னுரை

'இலக்கை' இயம்புவது இலக்கியம் என்பர். 'இலக்கியம் என்ற சொல், இலட்சியம் என்ற சொல்லின் திரிபு என்பார் நாமக்கல் கவிஞர் (நாமக்கல், 1960, ப.1). ஆயின், தமிழறிஞர் சாமி சிதம்பரனார் - "இலக்கு-திசை; மக்கள் எத்திசையில் போக வேண்டும் என்பதைக் காட்டுவதே இலக்கியம் ஆகும். வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதும் வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகளைக் கூறி வழி காட்டுவதும் இலக்கியம் ஆகும். இலக்கியம் செய்யுளிலும் அமையலாம்; உரைநடையிலும் அமையலாம். எவ்வடிவில் அமைந்தாலும் படிப்போர் இதயத்தைக் கவரும் வண்ணம் இலக்கியம் அமைய வேண்டும்." என்று கூறியிருப்பது சிந்தனைக்குரிய கருத்தாகும் (பாலசுப்பிரமணியம், 1989, ப.16). இலக்கியத்தைப் பல வகையில் பல கோணங்களில் ஆய்வு செய்யலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பாரதிதாசனின் கவிதைகளை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு அமைந்துள்ளது. வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களையும், சமுதாயச் சீர்திருத்தத்திற்கும், வாழ்க்கை இன்பத்திற்கும் எனப் பல நிலைகளில் கவிதைகளை எழுதியுள்ள பாரதிதாசன், அவர்தம் கவிதைகளில் உவமையியல் உணர்வுகளை ஆராயும் வகையில் இந்த ஆய்வு அமைந்துள்ளது.

## 1.2 ஆய்வுப் பின்னணி

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழிப் பற்றையும், சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையையும் அடிப்படையாகக் கொண்டு பாடியவர் பாரதியார். சுதந்திர அடிமை நிலையில் இருந்த மக்களுக்கு விழிப்புணர்வூட்ட எளிய நடையில் கவிதைகளைப் பாடினார் பாரதியார். அவரைப் பின்தொடர்ந்து வந்த பாரதிதாசனும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கவிதை நடையை எளிமைப்படுத்தினார்.

பாரதியாரைப் பின்பற்றிக் கவிதை எழுத ஆரம்பித்தவர் பாரதிதாசன். தனக்காக ஒரு பாட்டு எழுதேன் என்று பாரதியார் கேட்க, உடனே அவருக்காக,

> “எங்கெங்குக் காணினும் சக்தியடா - தம்பி
> ஏழு கடல் அவள் வண்ணமடா!
> தங்கும் வெளியினில் கோடியண்டம் - அந்தத்
> தாயின் கைப் பந்தென ஓடுமடா?
> கங்குலில் ஏழு முகிலினமும் - வந்து
> கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ? அது
> மங்கை நகைத்த ஒலியெனலாம் - அவள்
> மந்த நகை அங்கே மின்னுமடா?”

(பாரதிதாசன், 1992, ப.10)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


என்று பாடத் தொடங்கினார். “இக்கவிதை பாரதிதாசன் பாடிய முதல் கவிதை ஆகும். இப்பாடலின் அழகும், பொருளும் அவரைப் பாரதிதாசன் என்று தமிழ் நாட்டிற்கு உணர்த்தியது” (சாயபு மரைக்காயர், 1990, ப.502). இக்கவிதை பல பத்திரிகைகளில், பல மொழிகளில் வெளி வந்துள்ளது (பாரதிதாசன், 1992 ப.10).

பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம் ஆகும். இவர் ஏப்ரல் 29ஆம் திகதி 1891இல் புதுச்சேரியில் பிறந்தார். தந்தை கனகசபை முதலியார் மற்றும் தாயார் இலக்குமி அம்மாள் ஆவார்கள். இவருக்கு 1920ஆம் ஆண்டு திருமணம் நிகழ்ந்தது. இவருடைய மனைவியின் பெயர் பழனி அம்மையார் ஆகும். பாவேந்தருக்கு மன்னர் மன்னன் என்ற மகனும் மூன்று பெண் குழந்தைகளும் உள்ளனர் (பாரதிதாசன், 1990, ப.7).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பாவேந்தர் பாரதிதாசன் சிறுவயதிலேயே பிரெஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றார். ஆயினும், தமிழ்ப்பள்ளியில் பயின்ற காலமே அதிகம். தனது பதினாறாவது வயதிலேயே கல்வே கல்லூரியில் தமிழ்ப் புலவர் தேர்வு எழுதிப் புகுந்தார். தமிழ்மொழிப் பற்றும் முயற்சியால் தமிழறிவு நிறைந்தவராதலால் இரண்டே ஆண்டில் கல்லூரியில் முதலாவதாகத் தேர்வுற்றார். பின்பு, பதினெட்டு வயதில் அவரின் சிறப்புணர்ந்த அரசியலார் அவரை அரசினர் கல்லூரித் தமிழாசிரியராக்கினார்கள் (பாரதிதாசன். 1990, ப.9). கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன் எனப் பல புனைபெயர்களில் எழுதி வந்த பாவேந்தர் தந்தை பெரியாரின் தீவிரத் தொண்டர் ஆவார் (பாரதிதாசன், 1990, ப.10). திராவிடர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு மிகுந்தவர். பாரதிதாசன் நாத்திகர். அவர் கடவுள் நம்பிக்கை உடையவர் ஆனால் கடவுள், சமயம் ஆகியவற்றின் பெயரால் நடக்கும் கொடுமைகளை எதிர்ப்பவர் ஆவார். பாவேந்தர் தன்னை அரசியலிலும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஈடுபடுத்திக் கொண்டார். 1954ஆம் ஆண்டு புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகத் திகழ்ந்தார். இவர் அறிஞர் அண்ணா அவர்களால் ‘கவிஞர் புரட்சிக்கவி’ என்று பாராட்டப்பட்டு ரூ25,000 வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தொடக்க காலத்தில், பாரதிதாசன் இறை நம்பிக்கை, இறையுணர்வு மிக்க கவிதைகளைப் பாடினார். பிறகு, திராவிட இயக்கத்திலும், பெரியார் கொள்கையிலும், சுயமரியாதை இயக்கத்திலும் பாரதிதாசன் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதன் காரணமாகத் திராவிட இயக்க வளர்ச்சியோடு பாரதிதாசனின் வளர்ச்சியும், அறிமுகமும் இணைந்தே வேகமாக வெளிப்பட்டன. “புதுமைக் கருத்துக்களையும் புரட்சிக் கருத்துக்களையும் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டவர்” என்று பெரியார் பாரதிதாசனைப் பற்றிப் பாராட்டியிருக்கிறார் (கிருஷ்ணசாமி, 2004, ப.vi). தந்தை பெரியாரின் கருத்துக்களைக் கவிதை இலக்கியமாக்கியவர் பாரதிதாசன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பாரதிதாசன் மொழி உணர்வு, இன உணர்வு, சமுதாய உணர்வு என்று தனது உணர்ச்சி மிகுந்த சொற்களால் பல கவிதைகளை எழுதியுள்ளார். பாரதிதாசன் உணர்ச்சி மிகுந்த கவிதைகளைக் கூட அழகியலை வெளிப்படுத்தும் வகையில் எழுதியுள்ளார்.

திறனாய்வு உலகில், மேல் நாட்டின் தாக்கத்தால் பல புதிய அணுகுமுறைகள் வரத் தொடங்கியுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குவது அழகியல் துறையாகும். அத்துறையைப் பாரதிதாசன் கவிதைகளில் உவமைகளைப் பயன்படுத்தி, அவற்றில் காணும் அழகியலை வெளிக்கொண்டு வருவதே இந்த ஆய்வின் பின்னணியாக அமைகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.3 ஆய்வுச் சிக்கல்

பாரதிதாசன் பாரதியாரைப் பின்பற்றி கவிதை எழுத ஆரம்பித்தவர். தொடக்க காலத்தில் பாரதிதாசனின் கவிதைகள் இறை நம்பிக்கைப் பாடல்களாகவே இருந்தன. பிறகு, படிப்படியே பல வண்ணப்பாடல்களையும் எழுதினார். பல இலக்கியப் படைப்புகளைப் படைத்தவர் பின் காங்கிரஸ் தேசிய இயக்க, சுய மரியாதை இயக்கச் செயல்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதன் பிறகு, பாரதிதாசன் எழுதும் கவிதைகளில் பெரியாரின் தாக்கம் இருப்பதைக் காண முடிந்தது.

புரட்சிகரமான பாடல்களையும் எழுச்சிகரமான கவிதைகளையும் எழுதி வந்தார். இவை யாவும் சமுதாயச் சிக்கல்களை அடிப்படையாக வைத்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எழுதப்பட்ட கவிதைகள் ஆகும். புரட்சிகரமான கவிதைகளை எழுதிய பாரதிதாசன், தன்னுடைய அழகியல் பார்வையும் தன் கவிதையில் காட்டியுள்ளார். அழகியலை வெளிப்படுத்த தன் கவிதைகளில் உவமை சொல்லணிகளை அழகாக இணைத்துப் பாடியுள்ளார். தொல்காப்பிய ‘உவமையியல்’ இந்த ஆய்வின் கோட்பாடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தொல்காப்பியம் மிகவும் பழைமையான இலக்கண இலக்கிய நூல் ஆகும். பாரதிதாசன் 20ஆம் நூற்றாண்டுக் கவிஞர். இவர் புரட்சிகரமான கவிதைகளோடு அழகியல் உணர்வு கொண்ட கவிதைகளையும் எழுதியுள்ளார். அழகியல் உணர்வுகளை வெளிப்படுத்த புதிய உவமைகளைத் தன் கவிதைகளில் இணைத்துள்ளார். பாரதிதாசன் பயன்படுத்தியுள்ள புதிய உவமைகள் தொல்காப்பியம் கூறியுள்ள உவமையோடு பொருந்திப் போகின்றதா என்பதை ஆராய்வதே இந்த ஆய்வின் சிக்கலாக அமைகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.4 ஆய்வு நோக்கம்

'பாரதிதாசன் கவிதைகளில் உவமைகள்: ஒரு தொல்காப்பியப் பார்வை' எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வு கீழ்க்காணும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1. பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் உவமை சிறப்பை அடையாளம் கண்டு விளக்குதல்.
2. பாரதிதாசன் கவிதைகளில் தொல்காப்பிய உவமை கோட்பாட்டுப் பொருத்தப்பாட்டினைப் பகுத்தாய்தல்.
3. பாரதிதாசன் கவிதைகளில் இடம்பெற்றுள்ள தொல்காப்பிய உவமையியல் கூறுகளில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள கூறுகளை அடையாளம் காணுதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.5 ஆய்வு வினா / கருதுகோள்

'பாரதிதாசன் கவிதைகளில் உவமைகள்: ஒரு தொல்காப்பியப் பார்வை' எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வின் வினாவானது;

1. பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் உவமை சிறப்புகள் யாவை?
2. பாரதிதாசன் கவிதைகளில் தொல்காப்பிய உவமை கோட்பாடு பொருந்தி அமைந்துள்ளதா?
3. பாரதிதாசன் கவிதைகளில் இடம்பெற்றுள்ள தொல்காப்பிய உவமையியல் கூறுகளில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள கூறுகள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.6 ஆய்வு நன்மைகள்

பாரதிதாசன் கவிதைகளில் தொல்காப்பிய உவமையியல் நோக்கில் அழகியல் என்ற தலைப்பில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வானது, சில நன்மைகளைச் சேர்க்கிறது. 20ஆம் நூற்றாண்டுக் கவிஞர் பாரதிதாசன் தன் கவிதைகளில் பயன்படுத்தியுள்ள புதிய உவமைகள் பண்டைய இலக்கிய வடிவமான தொல்காப்பிய உவமைகளோடு பொருத்திப் பார்க்கும் பொழுது தொல்காப்பிய உவமைகள் பெருமைப்படுத்தப்படுகிறது. பாரதிதாசன் தன் கவிதைகளில் புதிய உவமைகளைக் காட்டியிருந்தாலும் பழைய இலக்கிய மரபுகளைப் பின்பற்றியே கவிதைகளை எழுதியுள்ளார் என்பதனை இந்த ஆய்வின் வழி காட்ட இயலும்.

புரட்சிச் சிந்தனைகள் உடைய பாரதிதாசனின் அழகியல் பார்வையையும் இந்த ஆய்வின் வழி வெளிக்கொணர முடியும். மேலும், பாரதிதாசன் கவிதைகளில் பயன்படுத்தியுள்ள புதிய உவமைகளை அழகியல் நோக்கில் வாசிக்கத் துணைபுரியும். முந்தைய ஆய்வுகளை ஆராயும்பொழுது பாரதிதாசன் கவிதைகளிலோ அல்லது பிற கவிஞர்கள் கவிதைகளிலோ தொல்காப்பிய உவமையியல் நோக்கில் அழகியல் அணுகுமுறையைப் பற்றி மலேசிய நாட்டில் எவரும் ஆய்வுகளைச் செய்யவில்லை. இந்த ஆய்வு அழகியலுக்கும், தொல்காப்பிய உவமையியலுக்கும் ஒரு முன்னோடி ஆய்வாக அமையும். தொடர்ந்து, உவமையியலிலும் அழகியலிலும் நிறைய ஆய்வுகளை மேற்கொள்ள இந்த ஆய்வு ஏதுவாக அமையும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.7 ஆய்வு எல்லை

பாரதிதாசன் பல்வேறு வடிவங்களில் பல இலக்கியப்படைப்புகளைத் தந்துள்ளார். ஆய்வு எல்லை கருதி பாரதிதாசன் கவிதைகளில்,

1. அழகின் சிரிப்பு
2. இசையமுது

ஆகிய இரண்டு கவிதை நூல்கள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

## 1.8 ஆய்வுச் சான்றாதாரங்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.8.1 முதன்மைச் சான்றாதாரங்கள்

பாரதிதாசன் இயற்றிய அழகின் சிரிப்பு மற்றும் இசையமுது ஆகிய இரண்டு கவிதை நூல்கள் இந்த ஆய்வின் முதன்மைச் சான்றாதாரங்கள் ஆகும்.

### 1.8.2 துணைமைச் சான்றாதாரங்கள்

பாரதிதாசன் படைப்புகள் தொடர்பான ஆய்வேடுகள், ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இதழ்கள், மாநாட்டு மலர்கள் ஆகியவை இந்த ஆய்வுக்குத் துணைமைச் சான்றாதாரங்கள் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.9 கலைச்சொல் விளக்கம்

### 1.9.1 பாரதிதாசன்

புரட்சிக்கவி என்று தமிழ் இலக்கிய உலகில் குறிப்பிடப்பட்டவர் பாரதிதாசன். 'என்னுடைய கவிதை உலகத்தைச் சேர்ந்தவர்' என்று பாரதியால் அறிமுகப் படுத்தப்பட்டவர் பாரதிதாசன். பாரதியார் பழமையைப் புதுமையோடு பாடினார்; பாரதிதாசன் புதுமையைப் புரட்சியோடு பாடினார். பாரதிதாசனின் கவிதைகளில் புரட்சிக் கருத்துக்களை அதிகம் காணலாம். அதோடு, இவரது கற்பனைகள் உள்ளத்து உணர்ச்சிகளையும் எழுச்சிகளையும் மிளிரச் செய்யும். பாரதிதாசன் பாடல்களில் உணர்ச்சியும் எழுச்சியும் வெளிப்படுகிறபொழுது அழகுணர்ச்சியே மிகுந்து நிற்கும் (பாலசுப்பிரமணியம், 1980, ப.142).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

"எனக்குக் குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும்; பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்" என்று தமிழ்ப் பெரியார் 'திரு.வி.க' அவர்களும், "பாரதிதாசன் கவிதையில் வேகம் உண்டு; விடுதலைத்தாகம் உண்டு; பண்பும் உண்டு பயனும் உண்டு" என்று 'ரா.பி,சேதுப்பிள்ளை' பேராசிரியர் அவர்களும் பாரதிதாசனைப் போற்றியுள்ளனர் (பாலசுப்பிரமணியம், 1981, ப.65).

### 1.9.2 கவிதை

உள்ளத்து உள்ளதை உள்ளவாறு சொல்வதும் உணர்ச்சிப் பெருக்கெடுப்பை வெளிப்படுத்துவதும் கவிதை ஆகும். நாடுவோர்க்கு நாடியதை அளிக்கும் இன்பக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கருவூலமாக அமைந்து கவிஞனின் உள்ளக் கருத்தைச் சொற்களின் மூலம் ஏந்தி நிற்பது கவிதை. கவிஞர்களின் படைப்பில் உருவெடுக்கும் கவிதைகள் யாவும் காலம் கடந்து நிற்பதில்லை. ஒரு சில கவிதைகள் மட்டும் சீரஞ்சீவியாய் நிற்கின்றன எனலாம் (குமரி அனந்தன், 1991, ப.9).

கரடு முரடான ஒரு மரத்தின் இளம் தளிர் போலவும், மனித உடலின் மிக மென்மையான உறுப்புகளில் ஒன்றாகிய இதயம் போலவும் நீண்ட காலம் பண்பட்டு வளர்ந்த இசை மரபின் வடிவமாகக் கவிதை விளங்குகிறது. கவிதையாவது பா முறையில் அமைந்த ஒன்று என்றும் அறிவின் உதவிக்குக் கற்பனையைத் துணையாகக் கொண்டு உண்மையை மகிழ்ச்சியூட்டும் வண்ணம் கலந்து வழங்கும் கலை என்று ஜான்ஸன் என்பவர் குறிப்பிடுகிறார் (பாலச்சந்திரன், 2012, ப.134).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

"பல் வகைத் தாதுவின்
உயிர்க்(கு) உடல்போல், பல
சொல்லால் பொருட்(கு) இட
னாக உணர்வினின்
வல்லோர் அணி பெறச்
செய்வன செய்யுள்"
(நன்னூல், சொல்லதிகாரம், சூ:268)

நன்னூலார் செய்யுள் இன்னது எனக் காட்டி, கவிதை இன்னது எனவும் காட்டியுள்ளார்.

தொடர்ந்து, பரிபாடல் எனும் பழம் பாட்டில்,

"'மாசுஇல் பனுவற் புலவர் புகழ்புல
நாவின் புனைந்தநன் கவிதை மாறாமை
மேவிப் பரந்து விரைந்து வினை நந்தத்
தாயிற்றே தண் அம் புனல்"
(பரிபாடல், ஆறாம் பாடல், 7-10 வரிகள்)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எனவரும் அடிகளில் நல்ல கவிதை குளிர்ந்த நன்னீருக்கு ஒப்பாகப் பேசப்பட்டுள்ளது.

### 1.9.3 உவமையியல்

கவிதைகளுள் இடம் பெறும் அணிகளில் உவமை அணியே தலையாயது. வாழ்க்கையில் நிகழும் உண்மைகளை அழகாக எடுத்துக் கூறுவது கவிதை. கவிதைக்கு அழகும் உயிர்ப்பும் கொடுப்பது உணர்ச்சிகளும் கருத்துகளும் ஆகும். இவற்றோடு இணைந்து சிறப்புத் தருவது கற்பனை. கற்பனையின் அழகான தோற்றம் உவமை ஆகும்.

உவமை கவிதையில் இடம்பெறும் பொழுது அல்லது இலக்கிய வகைகளில் இடம்பெறும்பொழுது இரு வகையாகப் பயன்படுகின்றது. அவை, தெளிவாகத் தெரியாதவற்றை நன்கு தெளிவுபடுத்திக் காட்டவும், தெரிந்ததை மேலும் சுவையூட்டும் வண்ணம் அழகுறக் காட்டவும் உவமை பயன்படுகிறது. இளம்பூரணர் இக்கூற்றினை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

"இதனாற்பயன் என்னை மதிப்பதோ எனின்
புலனல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக்
கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்"
(தொல்காப்பியம்,பொருளதிகாரம்,உவமையியல்,பக்: iii)

என்கிறார். தொல்காப்பியர் உவமை அணியினை நான்கு வகையாகப் பகுத்துள்ளார். அவை வினை, பயன், வடிவு, நிறம் என்பன ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


"போல", "புரைய" என்பன போன்ற உவம உருபுகள் வெளிப்படையாகக் காணப்படுங்கால் "உவம விரி" என்றும், இவை தொக்கி வரும்பொழுது "உவமைத்தொகை" என்றும் வழங்கப்பெறுகின்றன. "'தாமரை அன்ன முகம்" என்பது உவம விரி. "தாமரை முகம்" என்பது உவமைத்தொகை. தொல்காப்பியர் உவம உருபுகள் முப்பத்தாறினைத் தொகைப்படுத்தி அவற்றுள் அடங்காதனவும் உள்ளன எனக் குறிப்பிடுகிறார் (சுப்பு ரெட்டியார், 2001, ப.113).

சிறந்த உவமை, பொருளின் தன்மையைத் தெளிவாக விளங்க வைப்பதுடன் அதனைச் சிறப்பிக்கவும் செய்யும். எக்காலத்து இலக்கியமானாலும் அதனுடைய அழகைச் சிறப்பித்துக் கூறவல்லது உவமையாகும். அவ்வகையில் தமிழ்க் கவிதையில் இனிமையும், கருத்துச் செறிவும் சிந்தனைப்புரட்சியும், உவமையில் புதுமையுடன் கலந்து பாடியவர் கவிஞர் பாரதிதாசன் ஆவார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.4 அழகியல்

இலக்கியத் திறனாய்வில் அழகியலும் ஒரு கோட்பாடாகக் கருதப்படுகிறது. இக்கோட்பாடு இலக்கியத் திறனாய்வு உலகில் மிகவும் புகழ்பெற்ற மற்றும் பழமையான கோட்பாடு ஆகும். அழகியல் கோட்பாட்டினை ஆங்கிலத்தில் *"Aesthetic Theory"* என்று குறிப்பிடுகின்றனர். 1750ல், மெய்யியலாளரான பவும்கார்தேன் (Baumgarten) என்பவரே முதன் முதலில் கலை பற்றிய மெய்யியலாய்வைச் சுட்டுவதற்கு *"Aesthetikos"* என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். *"Aesthetikos"* என்பது கிரேக்க மொழிச் சொல்லாகும். இச்சொல் புலக்காட்சியைச் சுட்டும் என்கிறார். பவும்கார்தேன் புலக்காட்சியை மையமாகக் கொண்டு ஆய்வுத்துறையை உருவாக்க விரும்பி, ஒரு பொருள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi